*ஒன்றும் இல்லை. நீங்கள் சொன்னதற்கும் நான் சொல்கிறேன். இந்த அவை, பேரவை விதிப்படியும், இந்திய அரசமைப்புச் சட்டப்படி மட்டும்தான் நடைபெறும்; நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இனிவருங்காலத்திலும் அவ்வாறுதான் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) இல்லை,* please *போதும். (குறுக்கீடு) சரி. (குறுக்கீடு) நன்றி, நன்றி. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) நன்றி, நன்றி. (குறுக்கீடு)*

## 6. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கொரோனா காலத்தில் பணிபுரிந்த எம்.ஆர்.பி. தேர்வு முடித்த ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் கோரி போராட்டம் செய்வது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் ஒரு நிமிடம் தருகிறேன்.*

*பிற்பகல் 12–50*

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* MRB *முடித்து, கொரோனா காலத்தில் பணிபுரிந்த ஒப்பந்த செவிலியர்கள் தொடர்ச்சியாக பல்வேறு காலகட்டங்களில் நம்முடைய அரசிடம் கோரிக்கை வைத்தும், தங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், சம வேலைக்கு சம ஊதியம், காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும்,* DMS *அலுவலகத்திற்கு முன்பு, இயற்கை உபாதைகளுக்குக்கூட வசதியில்லாமல் தங்களை வருத்திக்கொண்டு, ஜனநாயக ரீதியாக தங்களுடைய கருத்துகளை வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள். தற்போது, காவல் துறை கைது செய்ய வந்தபோதுகூட இரண்டு நாட்களாக அவர்கள் ஒருவருக்கொருவர், கட்டிப்பிடித்துக்கொண்டு மயக்கமுறுகின்ற நிலையில் போராடி வருகிறார்கள்.*

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக, இதுபோன்று மக்களுக்கு சேவை செய்கின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், ஏனைய ஆசிரியப் பெருமக்கள் என அனைவரையும்*

அழைத்து, முறையாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களை அவ்விடத்திற்கு அனுப்பி வைத்து பேச வைப்பதும், துறைச் செயலாளர்களை அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வைப்பதும் என ஒரு சுமூகமான அணுகுமுறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் கடைப்பிடித்து வருகின்றார்கள். அவர்களும் அதை நன்றியோடு உணர்கின்றார்கள். ஆனால், அவர்களின் கோரிக்கைகள் இரண்டே முக்கால் ஆண்டுகளாகியும் நிறைவேறவில்லையே என்கிற ஒரு வலியோடு இருக்கின்றார்கள். ஆதலால், MRB முடித்து கொரோனா காலத்தில் பணிபுரிந்த ஒப்பந்த செவிலியர்களை உடனடியாக தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அவர்களை கருணையோடு பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். இதர இரண்டு பிரிவு செவிலியர்களுக்கும் இதே கோரிக்கைகள் இருக்கின்றன. தயவுசெய்து, மக்கள் உயிரைக் காக்க, தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்டு சேவை செய்கின்ற இதுபோன்ற பிரிவில் உள்ளவர்களுக்கு இந்த அரசு கருணை காட்ட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு என்றால் ஒரு நிமிடத்தில் அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டு அமர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

**திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்ன அத்துணை கருத்துகளையும் அப்படியே நான் வழிமொழிகிறேன். செவிலியர்கள் என்று சொன்னால், மக்கள் மத்தியிலே மிகப்பெரிய அனுதாபம் இருக்கிறது. நம் எல்லோருக்கும் அப்படித்தான். கொரோனா காலத்தில் உயிரைப் பணயம் வைத்து எப்படிப் பணியாற்றினார்கள் என்பதை எல்லோருமே அறிவோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சாலைக்கு வந்து போராடாமல், பேச்சுவார்த்தை மூலமாகவே அவர்களின் பிரச்சினையை சாலைக்கு வராமல் தீர்ப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசும் கருணை அடிப்படையிலே அவர்களுக்குத் தேவையான விஷயங்களை செய்து, அவர்கள்

*2023 அக்டோபர் 11]* [*திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்*]

*சுமூகமாக பணியாற்றி, உயிர்களைக் காப்பாற்றுவதற்கு உதவ வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

**திரு. மா. சின்னதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் மிக முக்கியமாகப் பணியாற்றுகின்ற செவிலியர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள். MRB முடித்த செவிலியர்களும், ஒப்பந்த செவிலியர்களாக இருக்கின்றவர்களும், நேற்றையதினம்கூட போராட்டத்தை நடத்தினார்கள். போராட்டம் நடத்துவதற்கு முன்னதாகவே, அமைச்சர்களை அனுப்பி, அரசுத் துறை அதிகாரிகளை அனுப்பி பேச்சுவார்த்தையின்மூலம் தீர்வு கண்டிருக்கலாம். அது பத்திரிகை, ஊடகங்களில் ஒரு பெரிய செய்தியாக மாறுகின்ற அளவிற்கு போக வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, தமிழ்நாடு அரசு, செவிலியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் என்கின்ற நம்பிக்கையை உருவாக்கக்கூடிய முறையில், அவர்களைப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்கி, அவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்க முன்வர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

**திருமதி வானதி சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்வி கற்க வேண்டும், பெண்கள் வேலைக்கு வர வேண்டும், அதன் வாயிலாக பெண்களுக்கான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென அரசு பல்வேறு முயற்சிகளை எடுப்பதாகச் சொல்கின்ற இந்த நேரத்தில், வேலைக்காக பெண்கள் தெருவிலே இறங்கி போராடிக் கொண்டிருப்பதையும், போராட்டக் களத்திலே, பெண்கள் காவல் துறையினரால் தூக்கிச் செல்லப்படுவதையெல்லாம், அவர்கள் பெண்கள் என்கின்ற முறையில், அது ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகள் கடக்க இருக்கும் இந்த நிலையில், செவிலியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றும், செவிலியர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் போராடியதால், அவர்களை அரசு கைது செய்திருக்கிறது. மருத்துவத் தேர்வு வாரியத்தால், போட்டித் தேர்வின்மூலம் பணியமர்த்தப்பட்ட 2,500 செவிலியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்தும், அவர்களுக்கு மீண்டும் பணி வழங்கக் கோரியும், தொகுப்பூதியத்தில் இருந்து காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்ட செவிலியர்களை பணி வரன்முறை செய்யக் கோரியும், சேவை மனப்பான்மையுடன் மகப்பேறு சேவை வழங்கும் தொகுப்பூதிய செவிலியர்களுக்கு ஊதியத்துடன்கூடிய மகப்பேறு விடுப்பு, மருத்துவ விடுப்பு, அத்தியாவசிய விடுப்பு போன்றவற்றை வழங்க வலியுறுத்தியும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், புதியதாக துவங்கப்பட்ட மருத்துவமனைகளிலும் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், மருத்துவத் தேர்வு வாரியம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களை காலிப் பணியிடங்களில் அமர்த்த வலியுறுத்தியும், செவிலியர்கள் சென்னை தேனாம்பேட்டையிலுள்ள பொது சுகாதார வளாகத்தில் போராடி வருகின்றனர். போராடும் செவிலியர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமல் அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை தி.மு.க. அரசு எடுத்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. (மணியடிக்கப்பெற்றது) போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் செவிலியர்களை உடனடியாக அழைத்துப்பேசி அவர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

*2023 அக்டோபர் 11]*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது செவிலியர்களுடைய போராட்டத்தைப்பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, பெண்கள் போராடுகிறார்கள் என்ற உணர்வோடும், அவர்கள் செவிலியர்களாக பணியாற்றக்கூடியவர்கள் என்ற உணர்வோடும், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று அன்பு வேண்டுகோளை முன்வைக்கிறேன். அதேபோல ஆசிரியர்கள் போராட்டம் தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆசிரியர் சங்கங்களின். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இதைமட்டும் பேசி அமருங்கள்.*

**திரு. ஜி.கே. மணி:** *ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் போராட்டம் என்பது இந்த அரசே பேசி முடிக்க வேண்டியது. போராடுவது மனிதர்களுடைய உரிமை. இந்த அரசின்மீது நம்பிக்கை வைத்துத்தான் போராடுகிறார்கள். ஏனென்றால், ஏற்கெனவே தேர்தல் அறிக்கையிலே, யாராவது கொரோனா நேரத்தில் பணி செய்த செவிலியர்கள் இருந்தால், அவர்களுடைய பணி நிரந்தரம் செய்யப்படும் என்று நாமே சொல்லியிருக்கிறோம், இந்த அரசே சொல்லியிருக்கிறது. நான் இதை ஏன் வலியுறுத்துகிறேன் என்றால், இன்று சுமார் 700 செவிலியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கக்கூடாது. இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி உடனடியாக நல்ல முடிவை எடுத்திருக்க வேண்டும். அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய பணியினை நிரந்தரம் செய்யவும் இனிமேலாவது, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலை தமிழ்நாடு MRB செவிலியர்கள் மேம்பாட்டுச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு போராட்டம் என்கின்ற வகையில், அத்துமீறி DPH, DMS அமைந்திருக்கின்ற வளாகத்திற்குள் 300, 400 பேர் நுழைந்திருக்கிறார்கள். போராட்டம் நடத்துவதற்கு அனைவருக்குமே ஜனநாயக ரீதியாக உரிமை உண்டு. சென்னையில் போராட்டம் நடத்துவதற்குரிய இடங்கள் என்று காவல் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற இடங்கள் வள்ளுவர் கோட்டம், சேப்பாக்கம், அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம். இங்கே போராட வேண்டுமென்று யார் அனுமதி கேட்டாலும், அங்கே அனுமதி தாராளமாக தரப்படுகிறது.

இந்த நிலையில் DPH, DMS போன்ற மருத்துவத் துறை அலுவலகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்ற வளாகத்தில் நாங்கள் போராடுவோம் என்கின்ற ரீதியில் அங்கே கூடியிருக்கிறார்கள். மற்றவர்களுடைய பணியும் பாதிக்கும் என்கின்ற நிலையில் உடனடியாக செவிலியர்களை அங்கிருந்து பக்கத்தில் இருக்கின்ற திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்று உட்கார வைத்திருக்கிறார்கள். நேற்றைக்கு சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதைக் கேள்விப்பட்டவுடன், நான் உடனடியாக மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, துறையின் செயலாளரை அழைத்து, நான் சட்டமன்றத்திற்குள் இருக்கிறேன், நீங்கள், அவர்களை அழைத்துப்பேசி தீர்வு கண்டு, அவர்களுக்குப் பதில் அளித்து அனுப்பவேண்டுமென்று சொல்லியிருந்தேன். உடனடியாக நம்முடைய துறையின் செயலாளர் அவர்கள், அவர்களில் முக்கியமானவர்களை வரவைத்து, 2 மணிநேரம் இடைவிடாது பேசி, நேற்று இரவே அவர்கள், ‘நாங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டோம்’ என்று செய்தியை கொடுத்துவிட்டு, ஊருக்குச் சென்றுவிட்டார்கள்.

ஆனால், இங்கே பேசிய தலைவர்கள், இன்னமும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப்போலவே ஒரு பிரமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நேற்று இரவே அந்தப் போராட்டம் முடிவுற்றிருக்கிறது. நேற்றுக் காலை தொடங்கிய போராட்டம், நேற்று மாலை முடிவுற்றிருக்கிறது. அவர்கள்

2023 அக்டோபர் 11][திரு. மா. சுப்பிரமணியன்]
பத்திரிகையில் கொடுத்த செய்தி, இன்று காலை தினமணி போன்ற பத்திரிகைகளிளெல்லாம்கூட 'போராட்டம் வாபஸ்' என்று செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்திருக்க வேண்டும். ஆனால், பார்க்காமலே தகவல் கோரலில் சில செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும் வருத்தமில்லை. காரணம், இந்த அரசைப் பொறுத்தவரை, இங்கே பேசியவர்களுக்கு நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, 2-7-2003 அரசு ஊழியர்கள் வரலாற்றில் ஒரு கருப்பு நாள். அந்த நாளை யாரும் மறக்கவே முடியாது. Essential Services Maintenance Act என்று சொல்லக்கூடிய ESMA, Tamil Nadu Essential Services Maintenance Act என்று சொல்லக்கூடிய TESMA. இந்த ESMA-வும், TESMA-வும் 2-7-2003-ல் கொண்டுவரப்பட்டு ஒன்றே முக்கால் இலட்சம் அரசு ஊழியர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். 12 ஆயிரம் அரசு ஊழியர்களை வீடுகளுக்கே தேடிச் சென்று காவல் துறையினர் சமூக விரோதிகளைப் பிடிப்பதைப்போல் பிடித்து சிறையில் அடைத்தார்கள். 12 ஆயிரம் பேரை சிறையில் அடைத்ததற்குப் பிறகு, அவர்கள் மேற்கொண்ட இன்னொரு நடவடிக்கை, 12 ஆயிரம் பேருக்குப் பதிலாக, இன்னொரு 12 ஆயிரம் பேரை 4,000 ரூபாய் சம்பளத்திற்கு பணியில் அமர்த்தினார்கள். இந்தத் தேதியை மீண்டும் பதிவு செய்கிறேன், 2-7-2003. தற்போது ஒப்பந்த செவிலியர்கள்மீது அக்கறை காட்டுகிற, இதற்கு முன் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் அன்புகூர்ந்து அந்த நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும். 12 ஆயிரம் பேருடைய வாழ்க்கை இருண்டே போய்விட்டது. ஒன்றே முக்கால் இலட்சம் பேருடைய வாழ்க்கை கேள்விக்குறியானது; இது அரசு ஊழியர்கள்.

பிற்பகல் 1-00

கடந்த காலத்தில் இதே மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த மருத்துவர்கள், செவிலியர்கள் அவர்களெல்லாம் போராடினால் அவர்களுக்கு கிடைக்கிற பரிசு என்னவாக இருந்ததென்றால், உடனடியாக இடமாற்றம்; உடனடியாக பணியிடை நீக்கம்; உடனடியாக பணியிலிருந்து விலக்குவது; மாவட்டம் விட்டு மாவட்டம் என்று அவர்களைப் பந்தாடுவது; இதைவிட கூடுதல் கொடுமை என்னவென்றால், பணியிலிருந்த மருத்துவர் லஷ்மி நரசிம்மன் என்பவர், போராட்டக் காலத்திலே இறந்து போனார். கடந்த ஆட்சியில் இப்படிப்பட்ட சூழலில் மருத்துவர்களின் நிலை இருந்தது. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 அக்டோபர் 11

அவர்கள், ஒருவர்கூட இந்தத் துறையில் பாதித்துவிடக் கூடாது, செவிலியராக இருந்தாலும், மருத்துவராக இருந்தாலும், மருத்துவத் துறையைச் சார்ந்த களப் பணியாளராக இருந்தாலும், ஒருவர்கூட எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகக் கூடாது என்றுதான் தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில், நேற்று காலை நடைபெறத் தொடங்கிய இந்தப் போராட்டம் குறித்து உடனடியாக எங்களிடத்திலே சொல்லி, நேற்று மாலையிலே அந்தப் போராட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது. செவிலியர்களிடையே பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. 15 நாட்களுக்கு முன்னால் வள்ளுவர் கோட்டம் அருகே வேறொரு தரப்பு செவிலியர்கள், வேறொரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்த நிலையில் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த உண்ணாவிரதத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாக அவர்களை அழைத்து நான் அவர்களுடன் 2 மணி நேரம் பேசி, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்றிரண்டை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, மிகுந்த சந்தோஷத்துடன் விடைபெற்றுச் சென்றார்கள். அதேபோல, நேற்றைக்கும் துறையின் செயலாளர், அவர்களை அழைத்து பேசியதற்குப் பிறகு, அவர்கள் மகிழ்ச்சியோடு சென்றிருக்கிறார்கள். அதில் 4 பேர், ‘குரோம்பேட்டையில் தங்கியிருக்கிறோம்; நாங்கள் இன்று மாலை 4 மணிக்கு வந்து அமைச்சர் அவர்களை சந்திக்கலாமா?’ என்று காலையில் கேட்டார்கள். வந்து பார்க்கச் சொல்லியிருக்கிறோம். இந்த நிலையில்தான் இந்தப் போராட்டம் இருந்து கொண்டிருக்கிறது.

இந்தத் துறையைப் பொறுத்தவரை, DME, DMS, DPH, ESI, Indian Medicine, குடும்ப நலத் துறை, District Health Society என்று பல துறைகளின்கீழ் 47,938 செவிலியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த 47,938 செவிலியர்களில் 12,787 பேர் ஒப்பந்த செவிலியர்கள். இந்த ஒப்பந்த செவிலியர்கள் எப்போது பணியமர்த்தப்பட்டார்கள் என்றால், 2015, 2016, 2017 மற்றும் 2020–க்குள்ளான கால கட்டங்களில் பணிக்கு வந்தவர்கள். நம்முடைய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவர்களில் ஒருவருக்குக்கூட பணி பாதிப்பு ஏற்படக் கூடாது என்ற வகையில்தான், அந்த ஒப்பந்தக் காலம் முடிவுற்ற உடனே,

2023 அக்டோபர் 11][திரு. மா. சுப்பிரமணியன்]
அவர்களுக்கு மீண்டும் District Health Society-ல், அவர்கள் ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருந்த சம்பளம் ரூ.14,000/-, NHM-ன் சார்பில் அவர்களுக்கு சம்பளத்தை 18,000 ரூபாயாக உயர்த்தி-அவர்களுடைய சொந்த மாவட்டங்களிலே பணியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, இன்றைக்கு பலரும் பணியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், தற்போது நிரந்தர செவிலியர்களுக்கான 499 பணியிடங்கள் காலியாக உள்ளன. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அந்த 499 நிரந்தர செவிலியர் பணியிடங்களையும் இவர்களை வைத்தே நிரப்பிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தவகையில் இந்தக் காலிப் பணியிடங்களுக்கு வருகிற 13-10-2023 அன்று கலந்தாய்வுமூலம் மூப்புநிலை மற்றும் இனசுழற்சி முறையில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, தற்போது, MRB ஒப்பந்த செவிலியர்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாளை மறுநாள் இந்தப் பணி நம்முடைய தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறவிருக்கிறது. ஏறத்தாழ 499 பேருக்கு வாழ்வு கிடைக்கவிருக்கிறது.

பிற்பகல் 1-05

அதோடுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை என்கிற மருத்துவக் கட்டமைப்பை உருவாக்கி, அதிலும் 300 ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர் பணியிடங்களை புதிதாகத் தோற்றுவித்து, அதிலும் தொகுப்பூதிய செவிலியர்களின் காலிப் பணியிடங்களை தற்காலிக செவிலியர்களைக் கொண்டு நிரப்பிட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, அந்தவகையில் 499 பணியிடங்களுக்குப் பிறகு அந்த 300 பணியிடங்களையும் கருணையுள்ளத்தோடு நிரப்புவதற்கான ஏற்பாட்டை தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவ்வப்போது, MRB மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற செவிலியர்களை நிரந்தரமாக காலமுறை ஊதியப் பணியிடங்களில் பணியமர்த்தம் செய்யும்போது ஏற்படுகிற தொகுப்பூதிய செவிலியர் காலிப் பணியிடங்களில், படிப்படியாக தற்காலிக செவிலியர்களின் சான்றிதழ்கள் சரிபார்த்து, இன சுழற்சி முறையில் பணி நியமனம் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர்

அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்த வகையில், தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேற்றைக்கு நடைபெற்ற ஒப்பந்த செவிலியர்களின் போராட்டத்தில் அவர்கள் வைத்த முக்கியமான கோரிக்கைகள் 11 என்று அவர்கள் சொல்லியிருந்தாலும், அவற்றில் மூன்று கோரிக்கைகள் மிக முக்கியமானவை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, அதிகமான நிரந்தர செவிலியர் பணியிடங்களை உருவாக்க வேண்டுமென்பதாகும். தமிழகத்தில் கூடுதலான செவிலியர் பணியிடங்களைப் புதிதாக உருவாக்க வேண்டுமென்கின்ற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதேபோல், நிரந்தர செவிலியர்களுக்குத் தரப்படுகிற மகப்பேறு விடுப்பு மற்றும் அதற்குரிய பணப் பயன்களை தங்களுக்கும் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மகப்பேறு விடுப்பு மற்றும் பணப் பயன்கள், புதிதாக நிரந்தர செவிலியர் பணியிடங்கள் உருவாக்குவது, ஒப்பந்தப் பணியிலிருந்து நிரந்தரப் பணிக்கு மாற்றம் செய்வது ஆகியவை மூன்று பிரதான கோரிக்கைகளாக இருக்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த மூன்று கோரிக்கைகளும் எடுத்துச் செல்லப்பட்டவுடன், 'நேற்றைக்கு அவர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டாலும் பரவாயில்லை; கருணையுள்ளத்தோடு, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதில் நாம் கூடுதலாகக் கவனத்தைச் செலுத்திட வேண்டும்' என்று அறிவுறுத்தியதன் அடிப்படையில், கூடுதல் செவிலியர் பணியிடங்களை துறையில் உருவாக்குவதற்கும், அவ்வப்போது எழுகிற நிரந்தர காலிப் பணியிடங்களில் ஒப்பந்த செவிலியர்களை நியமிப்பதற்கும், நிதித் துறையுடன் கலந்துபேசி, அவர்களுக்கு மகப்பேறு விடுப்பு மற்றும் பணப் பயன்களைப் பெற்றுத் தருவதற்கும், தேசிய நல்வாழ்வுக் குழும வழிகாட்டுதலின்படி, அரசிடம் கலந்தாலோசித்து, ஊதிய உயர்வு குறித்துப் பேசுவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்புகளை அவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறோம்.

தேசிய நல்வாழ்வுக் குழுமத்தின் சார்பில்தான் இந்தத் தொகை வழங்கப்படுகிறது. பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் சொன்னதைப்போல, ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற

2023 அக்டோபர் 11][திரு. மா. சுப்பிரமணியன்]

ஊதியமான ரூ.18,000/- இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக வரையறுக்கப்பட்ட ஊதியமாகும். குறிப்பாக, தமிழ்நாட்டில் மட்டும் ரூ.18,000/- வழங்கப்படுகிறது. பல்வேறு மாநிலங்களில் அந்த ஊதியம் ரூ.14,000/- ஆகவும், ரூ.13,000/- ஆகவும் இருந்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.18,000/- ஊதியத்துடன் சேர்த்து ஒவ்வோர் ஆண்டும் 5 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். நிச்சயமாக, எதிர்காலத்தில் அவர்களுடைய கோரிக்கை செவிமடுக்கப்படும்.

அதோடுமட்டுமல்ல, ஒரு செவிலியருக்கும் பணி பாதிப்பு இல்லை என்கின்ற ஒரு நிலை உருவாக்கப்படும். யார் எப்பொழுது போராட்டம் நடத்தினாலும், போராட்டம் நடத்துகிற இடத்திற்கே நேரடியாகச் சென்று, அவர்களுடைய போராட்டத்திற்கான காரணங்களைக் கேட்டறிந்து, அந்தப் போராட்டங்களைக் கனிவோடு பரிசீலிக்கிற அரசு, இந்த அரசு; கனிவோடு பரிசீலிக்கும் முதல்வர், தாயுள்ளத்தோடு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுகிற முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், எல்லோருமே மகிழ்ச்சியோடு நேற்றைக்கு போராட்டத்திலிருந்து விலகியிருக்கின்றார்கள் என்கின்ற செய்தியை தகவல் கோரியிருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். இங்கு வராதீர்கள். அங்கிருந்தே மைக்கில் பேசுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று தமிழ்நாட்டு மக்களுக்காக வாழ்ந்து மறைந்த முன்னாள் முதல்வர், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகாம் அலுவலகமாக இருந்த கொடநாடு பங்களாவில், 24-4-2017 அன்று. . .